செய்தி வெளியீடு எண்: 389 நாள் : 19.07.2013

இன்று 19.07.2013 (வெள்ளிக்கிழமை) மாண்புமிகு சமூகநலத் துறை மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர், திருமதி. பா.வளர்மதி அவர்கள் சென்னை, ஜார்ஜ் டவுன் மண்ணடி பகுதியில் உள்ள முத்தியால்பேட்டை மேல்நிலைபள்ளியின் சத்துணவுக் கூடத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள். அங்கு சத்துணவு சாப்பிடும் பள்ளி மாணவ, மாணவியர்களிடம் உணவு சரியாக வழங்கப்படுகிறதா என்றும், தரமாக உள்ளதா என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்கள். அப்பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் முட்டையின் எண்ணிக்கை, பயனாளிகளின் எண்ணிக்கையை விட குறைவாக இருந்ததை கண்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தினை சத்துணவு அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளரிடம் கேட்டறிந்து, இனி வருங்காலங்களில் இதுபோன்று தவறுகள் நடக்கக்கூடாது என்று கடுமையாக எச்சரித்தார்கள்.

மேலும், திருவள்ளூர் மாவட்டம், திருவெற்றியூர் ஜெய்கோபால் கரோடியா அரசினர் மேல்நிலைப்பள்ளியின் சத்துணவு மையத்தினையும் திடீரென ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சத்துணவு மையம் குறித்த நேரத்தில் திறக்கப்படாமலும், சத்துணவு பணியாளர்கள் குறித்த நேரத்தில் பணிக்கு வராததையும் கண்டு வருகை பதிவேட்டினை ஆய்வு செய்து, சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் ஆகியோர்களை தற்காலிக பணி நீக்கம் செய்ய திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

இவ்வாய்வின்போது பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9